# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 6

மனிதர்களின் சௌகரியங்களுக்கு ஏற்றபடி தர்மங்கள் மாறுவதில்லை; அசைவதில்லை. கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் தர்மம் மாறாது. அன்றாடப் பழக்கத்தில் உள்ள தர்மங்களுக்கும், அதன் விளைவுகளுக்கும் மாறுதல் நேரலாம். அவைகளின் மாற்றங்கள்கூட சாஸ்திரங்களின் அடிப்படையில் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அதைவிட்டு மாற்றங்களினால் ஆதாயமா, இழப்பா என்று சிந்திக்கக் கூடாது. சாத்திரங்கள் விதிகளை ஒப்புக்கொள்வதில்லை. தர்மத்துக்கு வெளிப்படையான காரணங்களைத் தேடுவது சுலபமான காரியமில்ல. அவைகளை வேத மந்திரங்கள் மூலமாகத்தான் அறிய முடியும்.

பலன்களை உபதேசித்துத் தர்மங்களை அனுஷ்டித்தால், தர்மங்களுக்கே தடைகள் ஏற்படலாம். தர்மங்களைக் கையாளுவதால் ஏற்படும் பலாபலன்களைக் குறித்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான எண்ணங்கள் தோன்றக்கூடும். ஜப தியான சத்தியாவந்தனங்கள் செய்வதால் ஏற்படும் பலன்களைக் குறித்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான அபிப்பிராயங்கள் ஏற்படலாம். சிலர் சந்தியா நேரத்தில் சந்தியாகாயத்திரி ஜபத்தை விட்டுவிட்டு, விஷ்ணு சகஸ்ரநாம பாராயணமோ, அன்றிச் சிவ சகஸ்ரநாம பாராயணமோ செய்து வருகிறார்கள். ''காலே சந்தியா சமாசரேத். " அதாவது, குறிப்பிட்ட நேரத்தில் சந்தியாவந்தனம் செய் என்பது பொருள். இவ்வாறு எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும், சிலர் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சந்தியாவந்தனம் செய்வதை விட்டுவிடுகிறார்களே, அது தர்ம விரோதமான செயலே, அல்லவா? அதேபோல அந்தந்த பிரிவினருக்கு ஏற்ப ஆசார தர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அநுபவ மூலம் அறியலாம்.

''சாதுர் வர்ண்யம் மாயாஸ்ருஷ்டம் குண கர்ம விபாஸஹ '' என்கிறது கீதை. இதனுடைய பொருள் மிகத் தெளிவானது. ''அவரவர்களுடைய பண்பு, செயல் இவைகளைப் பார்த்து, மனிதர்களில் நால்வகை இனங்கள் படைத்திருக்கிறேன்"

என்பதே அதன் பொருள். இல்லாத பொல்லாத காரண காரியங்களைக் கற்பித்துக் கொண்டு, வரட்டுவாதம் செய்வதும், தமக்குத் தோன்றியபடி தவறான வழியில் செல்வதும் பாவத்தை பற்றிய பயமோ தெய்வபயமோ இன்றி அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் ஏதும் அறியாத எளிய மக்களை கூட தவறான பாதையில் இழுத்துச் செல்வதுமான இத்தகைய விரும்பத்தகாத செயல்களில் ஏராளமான பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். வீழ்ச்சியடைந்தவர்களை மீட்கவும், காக்கவும், தர்மத்தை உத்தாரணம் செய்யவும் இறைவன் அவ்வப்பொழுது அவதாரம் செய்து கொண்டிருக்கிறார். ஆக இறைவன் பூமியில் அவதரிப்பதற்குக்கூட தர்மமே காரணம் என்று கீதையில் பகவான் மணியோசையாக முழங்கியிருக்கிறார்.

**'தர்ம ஸமஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே..'**

இங்கே ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். தர்மம் நசிந்து போய், அதர்மத்தின் சக்தி அதிகரித்துவிட்ட போது பகவான் அவதரிப்பார் என்பதாகச் சாதாரணமாகக் கீதாபாராயாணம் செய்பவர்களில் அநேகம் பேர் நினைக்கிறார்கள். அதில் தர்மம் நசிந்து விட்டதாக நினைப்பதற்கு ஆதாரமே இல்லை. பகவானும் கூட (கீதையில்) அவ்வாறு அறிவிக்க வில்லை. அதற்காகத்தான் 'காலனி' என்ற சொல்லை உப யோகித்திருக்கிறார். அதாவது தர்மத்துக்கு ஊறு நேரக்கூடிய அடையாளங்கள் தோன்றும் போது, தர்மத்தை ரட்சிக்க நான் வருவேன் என்று தெரிவிக்கிறாரே அல்லாது தர்மம் நசிந்து விட்ட பிறகு அதைக் காக்கவருவேன் என்று அறிவிக்கவில்லை. நோயாளி இறந்த பிறகு மருத்துவர் வந்து பயன் என்ன?

மானிடனின் உயிருக்கு மேலான தர்மம் நசிந்த பிறகு பவரோக மருத்துவரான பகவான் எதைக் காக்க வருகிறார்? அதனால்தான் நசிந்துவிட்ட பிறகு என்று குறிப்பிடாமல், ஊறு நேரும்போது என்று தெளிவாக்குவதற்காக, க்லானி என்ற சொல்லைப் பயன் படுத்துகிறார். தர்மத்தை ரட்சிப்பதே இறைவன் பணி. மனிதர்கள் தர்மத்தை உயிர்மூச்சாகவே கருத வேண்டும்.

தர்மத்தை மிக எளிய செயலாகக் கருதக் கூடாது. தர்மத்தைக் கடைப்பிடிக்காத மனிதன் உயிரற்ற உடலுக்குச் சமமானவன்; கற்சிலைக்கு

ஒப்பானவன். அதர்ம வழியில் சென்று கொண்டிருக்கும் மனித குலத்தைக் சாம, தான, பேத, தண்ட உபாயங்களைக் கையாண்டாவது தர்ம வழிக்குத் திருப்பியாக வேண்டும். முற்காலத்தில் தர்மத்தை அனுசரித்தால் உயிரைப் போக்கிவிடுவோம் என்று வாள் முனையில் மிரட்டினால் கூட அந்த மக்கள் அதர்ம வழியை மேற்கொள்ளமாட்டார்கள். இப்பொழுது பிறரின் தூண்டுதலின்றியே, தாமாகவே அறவழியிலி இருந்து நழுவிக் கொண்டிருக்கிறார்கள்.

தர்மத்துக்கு பலவிதமாகப் பொருள் சொல்லிக்கொண்டு, தர்மத்தை அனுசரிப்பவர்களுக்கும் அநேக விதமான தடங்கல்களை ஏற்படுத்திக்கொண்டு, அறவழியை மேற்கொள்ளுபவர்களைத் துரும்பைவிடக் கேவலமாக நடத்துகிறார்கள். தர்மத்தை அநுஷ்டிப்பவர்களை வஞ்சகர்கள், கபட நாடக மாடுபவர்கள் என்றும் நினைக்கிறார்கள். அந்த மூர்க்கர்களுக்குத் தர்மம் என்றால் என்ன என்றுகூடத் தெரியாது. உண்மையைப் புரிந்து கொள்ளகூடிய சக்தியும் இல்லை. அந்த சொல்லின் பொருள் கூட தெரியாத பாமரர்கள் அவர்கள். பாவம் (Sin) என்ற சொல்லுக்குக் கூடப் பொருள் அறியாதவர்கள். அப்படியிருக்கும் போது அறவழியை மேற் கொள்வது பற்றி அவர்களுக்கு என்ன தெரியும் என்று நீங்களே எண்ணிப் பாருங்கள். பிறவிக் குருடனுக்குக் கதிரவனைப் பற்றியோ, கதிரவனின் ஒளியைப் பற்றியோ என்ன தெரியும்? ஒளிக் கதிர்கள் உடலில் படும் போது அதன் வெப்பத்தை மட்டும்தான் அவனால் உணர முடியும்.

தர்ம தத்துவங்களின் மேல் நம்பிக்கை இல்லாதவன், அறவழியை மேற்கொள்ளாதவன், அறவழியில் செல்வதால் ஏற்படும் ஆனந்தத்தை எங்ஙனம் அறிவான்? அவனிடம் தர்ம தத்துவங்களை விவரிப்பது, செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல் பயனற்றதே. ஊதுபவனின் வாயில் உள்ள சங்கை மட்டுமே செவிடனால் பார்க்க முடியுமே தவிர, அதன் நாதத்தை உணர்ந்து ரசிக்க முடியாதல்லவா? ஒருவனுக்கு இதன் தத்துவத்தைக் கூறுமுன், அதைக் கேட்டவரின் சிரத்தையைக் கவனித்து, தர்மத்தை அநுசரிக்க விருப்ப முடையவர்கள் என்று தெரிந்தால், அவர்களுக்குத்தான் தர்ம தத்துவத்தை விளக்க வேண்டும். அவர்கள் அறவழியில் சென்று பெறும் அனுபவங்களை பார்த்து, தர்மத்தை நம்பாத

மூடர்கள் கூடச் சிறிது சிறிதாக அதைக் கையாளும் எண்ணத்தைப் பெறுவார்கள்.

இன்று எத்தனையோ பேர் அதிகம் படித்தவர்கள் இருக்கிறார்கள். வேத சாஸ்திரங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள் கூடத் தர்மங்களை அநுசரிக்காமல், உலகத்தின் மேல் உள்ள பயத்தாலும், நவீன காலக் கல்வி முறையாலும், தவறான எண்ணங்களாலும், தர்மத்தின் மேல் நம்பிக்கை இழந்து நிற்கிறார்கள். ஏகாதசி விரதம், ஸ்நானம், சந்தியா வந்தனம், உபவாசம் ஆகியவைகள் உடல் நலத்துக்குத் தான் என்றும், கற்பூர ஆரத்தி காட்டுவதில் அதன் வெளிச்சமும், தூபமும் மூச்சுத் திணறலுக்கு (ஆஸ்துமா) நன்மை பயப்பது என்றும், பிராணாயாமம் செய்வது ஜீரண சக்தியை அதிகப் படுத்தும் என்றும், தீர்த்த யாத்திரை போவதும், புண்ணிய நதிகளில் குளிப்பதும் உலக அனுபவம் பெறுவதற்கான வழியென்றும் பலவிதமாகக் கூறி, பவித்திரமான செயல்களைத் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படித்திரித்துக் கூறுபவர்கள், வஞ்சகர்கள் காட்டுமிராண்டிகள். இவைகள் மனுதர்மத்தைப் படிப்பதால் சிறிது தெளிவு பெறலாம்.

**ஆர்ஷம் தர்மோபதேசம் ச**
**வேத சாஸ்திர அ விரோதி நா ।**
**யஸ்த்தர்கே நாநு ஸந்ததே**
**ஸ தர்மம் வேத நேத்ரஹ ॥**

என்று கூறுகிறார் மனு. அதாவது, "வேதம், தர்ம சாஸ்திரங்கள் இந்த இரண்டில், வேத சாஸ்திரங்களுக்கு விரோதமற்ற விவாதங்களோடு யார் தர்மத்தை விமர்சிக்கிறார்களோ , அவரே தர்மத்தை அறிந்தவர் ஆவார். மற்றவர்களால் இதை அறிய முடியாது. இதனுடைய உட்பொருள் என்ன வென்றால், வேத சாஸ்திரங்களுக்கு உடன்பாடான ஊகம் எதுவோ அதைத்தான் மனு உறுதிப்படுத்துகிறார். அன்றி வேத சாஸ்திரங்களே தர்மங்களுக்கு ஆதாரம் என்று கூறவில்லை. இல்லாத பொல்லாத விவாதங்களால் பயனில்லை; பயன் ஏற்படாது. இக்காலத்தில் ஏராளமானவர்கள் தர்க்க வாதங்களில் இறங்கி, தாமும் அதர்ம வழியில் சென்று, அறவழியில் செல்லுபவர்களைக் கூடத் தம் வாதத் திறமையால்

மாறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மனிதர்களுக்கு ஆராதனை, தெய்வ சிந்தனை ஆகியவைகள் விரோதமான செயல்களாகத் தோன்றும். இன்றைய மாறுதலைக் குறித்து அந்த நாட்களிலேயே வேத வியாஸர்,

**ந யுகசந்தி ந ஹோஷ்யந்தி ஹேது வாத விமோதிதாஹ**
**நீச கர்மம் கரிஷ்யந்தி, ஹேது வாத விமோதிதாஹ**

தர்க்கவாதங்களை விரும்புவர்கள், தெய்வ உருவங்களை வழி படமாட்டார்கள். அக்கினியை வளர்த்து ஹோமம் செய்ய மாட்டார்கள். நீசத்தனமான செயல்களில் ஈடுபடுவார்கள் என்று வேத வியாசர் மகா பாரதத்தில், கலியைப் பற்றிய வர்ணனையில் கூறியிருக்கிறார். தத்தம் தர்மங்களை அநுசரித்துச் சூரிய சந்திரர்கள் தத்தம் கதியில் தவறாமல் சஞ்சரித்து வருகிறார்கள். சகல தேவதைகளும், பஞ்சபூதங்களும், தத்தம் தர்மங்களை அனுசரித்து வருகின்றன. தாமும் தர்மத்திலிருந்து பிறழ்ந்து துன்பத்தை ஏற்காமல் பிறருக்கும் அது நேராவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். தர்மம் என்னும் பேரொளி பிரபஞ்சம் முழுவதும் பரவி ஒளி வீச வேண்டும். விவாதங்களுக்கு இடம் தந்து மூளையைக் கெடுத்துக் கொள்ளாமல், உண்மையான ஆத்ம தத்துவத்தின் மேல் நம்பிக்கை வைத்து, அதன் மூலமாகத் தர்மத்தை ஆதாரமாகக் கொண்டு அன்றாட செயல்களில் அதைப் புகுத்தி, அநுசரித்து ஆனந்தம் பெற வேண்டும்.

''உத்யோகம் புருஷ லட்சணம்' என்றும் சாதாரணமாக மக்கள் கூறுவது வழக்கம். இதை சிறிதளவும் ஒப்புக்கொள்ள முடியாது. இந்தக் காலத்தில் எல்லோருக்கும் உத்தியோகம் கிடைப்பதில்லை. மேலே சொல்லப்பட்ட பழமொழிப்படிப் பார்த்தால் உத்தியோகம் கிட்டாதவர்கள் எல்லாம் புருஷ லட்சணம் அற்றவர்கள் என்று பொருளாகிறது. இல்லையா? இந்தப் பழமொழிகள் அவரவர்களுடைய சௌகரியங்களை பொறுத்து ஏற்பட்டது.

"தர்மம் புருஷ லட்சணம்" என்ற பழமொழி அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றே. ஒவ்வோர் ஆண்மகனும் அறம் பொருள் இன்பம் வீடு (ஆத்ம அர்த்த காம மோட்சம்) இவைகளில் அறத்தைக் கட்டாயமாக அநுசரித்தே ஆக வேண்டும். அதுவே புருஷார்த்த தர்மம்.

பெண்ணுக்குப் பதிவிரதா தர்மம் எப்படியோ, அவ்வாறே ஆண்களுக்கு பிரம்மச்சரியம் , பெண்கள் ஒருவரை மட்டுமே கணவனாக வரிக்க வேண்டும் என்று எப்படி வற்புறுத்துகிறோமோ, அது போலவே ஆண்களும் ஏகபத்தினி விரதத்தை மேற்கொள்ள வேண்டும். பெண் எப்படித் தன் கணவனைத் தெய்வமாக மதிக்கிறார்களோ அதே போல கணவனும் தன் மனைவியை கிருஹலஷ்மியாகப் பாவித்து, அவளுடைய விருப்பத்துக்குத் தக்கபடி நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அவன் புருஷ லட்சணம் உடையவனாவான். மானம், அவமானம், பெயர், புகழ்,கீர்த்தி, நற்குணம் துர்க்குணம் ஆகிய அனைத்தும் ஆண், பெண் இருவருக்கும் சமமே. இதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பது இல்லை .

மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகள் எல்லாம் பெண்ணை மட்டும் கட்டுப்படுத்தும் என்றும், ஆணை கட்டுப்படுத்தாது என்றும் எண்ணுவது தவறு. ஆணாகட்டும், பெண்ணாகட்டும் இருவருமே மேலே சொல்லப்பட்ட விதிகளை அநுசரிக்க வேண்டும். பெண்கள் ஆண்களின் கைப் பொம்மைகள் அல்லர். தர்ம, கர்மங்களைப் பொறுத்த வரையில் இருவரும் சமமானவர்களே. இருவருமே சாந்தி, சத்தியம், பிரேமை, அஹிம்சை ஆகியவைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நான்கு பவித்திரமான உணர்வுகளை மறந்து நடந்தால் அறவழியில் இருந்து பிறழ்ந்தவர்கள் ஆவார்கள். பெண்கள் சில காரியங்களைச் செய்யக் கூடாது என்று தடுக்கப்படுவதைப் போல, ஆண்கள் செய்யக் கூடாத சில செயல்களும் உண்டு. ஆண்களும், பெண்களும் அநுசரிக்க வேண்டிய நிபந்தனைகளில் ஒரு சில விதிகளே மேலே சொல்லப்பட்டிருப்பவை.